May 1911. Registered No. M. 925.

உ

# செந்தமிழ்ச் செல்வம்.

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்,

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-௵ வைகாசி-மீ 7-உ [பகுதி-2

உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| செந்தமிழ்ச்செல்வம். | பத்திராதிபர். | 25 |
| கல்வி. | மகா-ள-ள-ஸ்ரீ மு. வேங்கடசாமி நாட்டார் | 28 |
| எரிமலை. | ,, R. இராமய்யர் | 33 |
| கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி. | ,, குரு. சுப்பிரமணிய ஐயர் | 36 |
| அணுப்புதல். | ,, பத்திராதிபர் | 38 |
| வேதியர்வீட்டு விநோத விஸ்தாரசம்பாஷணை | ,, A. வைத்திநாதய்யர் B. A., | 41 |
| நம்நாட்டுப்பெண்மணிகளின் தற்கால நிலைமை. | ஸ்ரீமதி, அ. சுப்பம்மாள். | 44 |
| சமாச்சாரக்குறிப்புகள். | | |


பத்திராதிபர்:—பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை,
திரிசிரபுரம்.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.

மாதிரிப் பத்திரிகை. 0—3—0.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா 4

வெளிநாட்டுக்கு ரூ. [illegible] தனி சஞ்சிகை அணா 2

*Copy Right Registered.*

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ பிரஸ், திருச்சி.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்ச் செல்வம்.

இப்பெயர்கொண்ட பத்திரிகை திரிசிரபுரம் கோட்டை கள்ளத்தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை திருவருட் டமிழ்ச்சங்கத்தாரின் நன்முயற்சியால் மாதந்தோறும் வெளிவரும்.

இது, பெரும்பான்மையும் தமிழிலக்கிய இலக்கண விஷயங்களும், தமிழ்நாட்டுப் புராதன சரிதங்களும், தர்க்கம், பக்தி, ஞானம், ரசாயனசாஸ்திரம், வானசாஸ்திரம், விவசாயம், கைத்தொழில், சமாச்சாரக்குறிப்பு முதலிய பல இன்றியமையாத விஷயங்கள் ஆங்கிலம் தமிழ் முதலிய கலாஞானமுடைய வித்துவான்களால் துறைத்தனப் பத்திரிகை விதியை யனுசரித்து எழுதப்பெற்று தமிழ் வளர்ச்சி கருதி நடைபெறும்.

இச்"செந்தமிழ்ச் செல்வம்" அதிகப் பொருட்செலவிற் பிரசுரிக்கப்படினும் செந்தமிழ் அபிவிருத்திகருதி குறைந்தவிலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இதனைப் பெற விரும்புவோர் பத்திராதிபருக்கு எழுதி V. P. தபால் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

உ

# செந்தமிழ்ச் செல்வம்.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை.

தொகுதி-1 ] விரோதிகிருது-௵ வைகாசி-௴ 1-௳ [ பகுதி-2

## பத்திரிகை.

தேவர்கோன் முதலிய தேவர் பதங்களையும் மேவருமின்பத்து அழிவில் வீட்டையும் வழியறிந்து சேரற்குரிய மனிதர்க்கு உறுதியுடையனவெனப் பெரியோரானேயெடுத்து ஓதப்பட்ட அறம்பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கினையும் தரத்தக்க முக்கிய சாதனமாயுள்ளது கல்வியே.

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலாம். கற்றற்குரிய நூல்கள் பலதிறப்படினும் அவை எண்ணுமெழுத்துமாகிய இரண்டனுளடங்கும்.

எண்ணென்பது காட்சி முதலிய அளவைகளால் அர்த்த நிச்சயஞ் செய்யுந் தருக்கமாம். எழுத்தென்பது வழுக்களைந்து பத நிச்சயஞ் செய்யும் இலக்கண நூலாம்.

இவற்றை, “காண்டலனு மானங் கதையருத்தா பத்தியினை
யீண்டிசைத்த வெண்ணெனவே யெண்”, என்றும்
“வழுப்பதத்தை வாக்கினுக்கு மாற்றிவர மாக்கு
மெழுத்தெழுவா யைந்து மெழுத்து” என்றுங்
கூறியுள்ள ஆன்றோர் வாக்குகளினாலுந் தெளியப்படும்.

முதனூற்பொருள்களை யுணர்தற்குப் பத நிச்சயமும் அர்த்த நிச்சயமும் இன்றியமையாதனவாம். இவையிரண்டும் மாந்தர்க்கு இருகண் போல்வனவாம். இருகண்போலும் கருவி நூற்களைக் கல்லாதார் முதனூற் பொருள்களை ஆராயத் துணிதல் குருடன் கோலாற்றடவி வழி நடக்க முயன்றதையே யொக்கும். எங்ஙனங் கோலாற்றடவி வழிநடக்க முயன்றவன் வழியேயுள்ள குழி முதலியவற்றில் வீழ்ந்து வருந்துவது

மன்றித் தான்சேர விரும்பிய இடத்தைச்சேராமே ஆங்ஙனமே பொய்ப் பொருள்களை மெய்ப்பொருளென மருண்டுகொண்டு நிரைய முதலிய வற்றில் வீழ்ந்து வருந்துவதுமன்றித் தாமுணர விரும்பிய மெய்ப்பொருளை யுணராது போவர். இதுபற்றியன்றோ.

"இல்லான்கண் கோலால் வழியியங்கல் போலுமே
கல்லாஞர் லாயுங் கருத்து" என்றார் புலவர்.

தமிழ்வேத முரைத்தருளிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"
எனத்திருவாய் மலர்ந்தருளினர்.

இதனானே ஒரு பத்திரிகை கல்வியை அதாவது எண்ணையும்எழுத்தையும் மாந்தர்க்குக் கற்பிக்கக் கூடியதாயிருத்தல் சால அவசியமுடையது.

இன்னும் "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்றும்
"ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்" என்றும் பொய்யா மொழியிற் புகன்றருளியமையால் நல்லொழுக்கம் மாந்தர்க்கு மிக அவசியமுடையீது; ஆதலால் நல்லொழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய பெரியோர் சரிதங்களும் நீதிகளும் கதைகளும் அமையப்பெற்றிருத்தல் அதனினும் நனிமிக அவசியமுடைத்தாம்.

இஃதன்றி, மேன்மேலும் அவ்வக்காலத்திற்குத் தக்கவாறு நவீனமாகப் பலப்பல விடயங்களைத் தெரிந்து கோடற்கும் பிறநாட்டினும் பிறமொழியினுமுள்ள சீரிய விடயங்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளுமாறு முறையே பலவியாசங்களையும் மொழிபெயர்ப்புகளையுந் தன் கண் பெற்றிருத்தல் பத்திரிகைக்கு மிகஇன்றியமையாச்சிறப்பினதாகும்.

நமது "செந்தமிழ்ச் செல்வம்" மேற்சொல்லிய முக்கியமான இலக்கணங்கள் நிரம்பப் பெற்றிருப்பதுமன்றி மக்கட்கின்றியமையாத வெவையுந் தன்னகத்தே கொண்டு உலவா நிற்கும்.

நிற்க, யாவருள்ளத்தையும் உவக்கச்செயல் கடவுளர்க்கு முடியாதாகலின் ஒவ்வொருவருக்கும் உவகை பயக்குமாறு பத்திரிகையில் விடயங்களை வரைவது அசாத்தியமே.

என்றாலும், எம்மாலியன்றமட்டுமேனும் பலரும் பாராட்டுமாறு உபகாரமாதற்குரிய விடயங்களை வரைந்து வெளிப்படுத்த வுறுதி செய்திருக்கின்றோம்.

ஆதலால், உபகார சீலர்கள் யாவரும் இதனைப் பாராட்டி அபிமானித்து மேன்மேலும் நம் "செந்தமிழ்ச் செல்வம்" அன்பர்களுக்குக் களிப்பைத்தருமாறு வளர்ந்துலாவி வரச் செய்வார்களென்று நம்புகின்றோம்.

இங்ஙனம் அபிமானிக்கும் உபகார சீலர்கள் ஏகதேசத்தில் சில வழுக்களைக் கண்டமட்டில் பத்திரிகை யிடத்தே அருவை தோன்றிக் கைவிடாவாறு வேண்டுகின்றோம். ஏகதேசத்தில் வழுவுதல் எத்தகைய மனிதர்களுக்கும் இயல்பேயாகலின் அத்தகைய வழு மேலும் மேலுங் கலவாதபடி எமக்கு உணர்த்தி இச் "செந்தமிழ்ச் செல்வம்" செவ்வியினிலவியுலவச் செய்வது பெரியோரின் கடன்மையாகும்.

இவ்வாறன்றிச் சில அற்பவழுக்களைக் கண்டமட்டில் அதனைப் பெரிதாகப் பெருக்கித் தம்வன்மையாற் கேட்பவர் உள்ளங் கொள்ளக் காட்டி ஏனைய அபிமானிகளையும் விசுவாசமறச் செய்து "தாமுமொரு பயன்படார் பயன்படுவார் தம்மையும் தம்போற் செய்வார்" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கிலக்காகாமல் தம்பெருமைக் கேற்ப இதனை மாசின்றி மேன்மேலும் பெருகிவரத் துணைநின்று முயற்சிசெய்து எம்மையும் ஆசீர்வதிப்பாராக.

நிற்க, எமது முயற்சிக்குத் துணைநின்று உதவிபுரிந்த அன்பர்களைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் எடுத்து எழுதுவோம். அவர்களை மனமார நினைந்து வாயார வாழ்த்தித் துதித்து அவர்க்கு நனிமிக வந்தனத்தைச் செலுத்துகின்றோம். சுபம்!

பத்திராதிபர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# கல்வி.

(1. கல்வி, என்பதின் பொருள். 2. மக்கட்குக்கல்வி, இன்றியமையாததென்பது. 3. கல்வியின் வகை. 4. கற்கும் நெறியும், கற்றவர்க்கிருக்கவேண்டிய குணங்களும். 5. கல்வியின் பயன்.)

1. கல்வி யென்னுந் தமிழ்ச்சொல், விவ்விகுதிபெற்ற தொழிற்பெயர். இதன்செம்பொருள் கற்றல் அல்லது ஆராய்தல் என்பது. இச்சொல் ஆகுபெயராய்ப் பிற பொருளையு முணர்த்தும். "தொடங்குங்காற்றுன்பமாயின்பம் பயக்கும் ............கல்வி" என்புழிக்கற்றல் என்னும் பொருட்டாயும், "கல்வி கரையில" என்புழிக் கற்கப் படுநூல்கள் என்னும் பொருட்டாயும், "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்-கெழுமையு மேமாப்புடைத்து" என்புழி நூல்களைக் கற்றதனாலாய அறிவு என்னும் பொருட்டாயும் கல்வியென்னுஞ் சொல்நிற்றலை யூகித்துணர்க. வேளாண்மை, வாணிகம் முதலிய தொழில்களிற் பயிலுதலும் கல்வியேயெனின் அவற்றையும், பிறவற்றையு முணர்த்தும் நூல் பயிறலையே கல்வியென ஆன்றோர் கூறிப்போந்தாரென்க.

2. எண்ணரிய பிறவிகளில் மானுடப்பிறவியே மேலானதென்று பெரியோர் பலரும் கூறியிருத்தற்குக் காரணம் என்னவென்றாராய்ந்து பார்க்கில்—செய்மையாகிய காலதேசங்களில் நிகழ்ந்தனவும் நிகழ்வனவுமாகியவைகளை யுணர்ந்துகொள்ளுதலும், உறுதியுள்ளவும் இல்லவுமாகிய நித்தவநித்தப் பொருள்களின் கூறுபாட்டையுணர்ந்து, உறுதிப்பொருளையடைதற்குத் தக்க வழியில் முயறலும், முயன்றடைதலும் மக்களுயிர்க்கன்றி ஏனையுயிர்க்குக் கூடாமைபற்றியே யென்னலாம். மானுடதேகத்தையடைந்தும் மேற்கூறியவைகளைச் செய்யும் வலியிலராயின் அவர்களை அவை வல்லமக்களோடு ஒருங்குவைத்தெண்ணல் பொருந்தாதென்று கருதியே 'மாக்கள்' என வேறு பெயர் கொடுத்தொதுக்கி "மாவுமாக்களுமையறிவினவே" என்று கூறினார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். அங்ஙனம் மக்கட்குவேண்டிய எல்லாவற்றையும் அறிந்தடைவதற்குக் கல்வியே முக்கிய சாதனமாயுள்ளது. இறந்தகால, எதிர்காலச் சம்பவங்களையும் நிகழ்காலத்தும் செய்மைக்கண்ணவும் நண்ணியவுமாகிய சம்பவங்களையும் அறிதற்குக் கல்வியாகிய கண்ணன்றி முகத்திருக்கும்

கண்கள் பயன்படுவனவல்ல. அதுபற்றியே "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்" என்றார். கற்றனைத் தூறுமறிவு" என்றாராகலின்—கல்வியாகிய சாணைக்கல்லில் கொடுத்து நம்மறிவைக் கூர்மைப்படுத்திக்கொண்டாலல்லது எவற்றையும் நுண்ணிதி னுணருந்தரத்தினமல்லோம். அன்றியும் நம் விழிகள் சூரியன் முதலாகிய கதிரினுதவியின்றி யெப்பொருளையும் பாராதவாறுபோல் நம்மியற்கை யறிவும் கல்வியினுதவியின்றி இம்மை, மறுமை, வீடு என்பவைகளை யறிந்துகொள்ளமாட்டா. இது காறுங் கூறியவற்றால் மக்கட் பிறப்பிற்கு மேன்மை, அறிவு விசேடமும் அறிதல் விசேடமும் பற்றியே யென்பதும், அவை கல்வியானன்றி யில்லை யென்பதும், அக்கல்வியில் லாதோர் "விலங்கொடுமக்களனையரிலங்குநூல் கற்றாரோடேனையவர்" என்றபடி விலங்காகவேனும் மக்களுட் குருடாகவேனும் எண்ணப் படுவ ரென்பதும், ஆதலாற் கல்வி யொருதலையான் வேண்டப் படுவ தென்பதும் வெள்ளிடை மலையாதல் பெற்றாம்.

3. கற்கப்படும் நூல்களெல்லாம் பொருணூலும் கருவிநூலும் என்றிருவகைய. அவற்றுள் பொருணூல், அறநூலும், பொருணூலும், இன்பநூலும், வீட்டு நூலும் என நால்வகைத்து. கருவிநூல், இலக்கணம் தருக்கம் கணிதம் முதலியவையாம். இவை அறம் முதலிய பொருணூல்களைப் படித்தறிதற்குக் கருவியாயிருத்தலின் கருவிநூ லெனப்பட்டன. கருவியாதல்:— "எழுத்தறியத்தீரும் இழிதகைமை ..............முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறும்" என்பது முதலிய மேற்கோளானுணர்க. அதுபற்றியன்றே! தமிழ் மூதாட்டியாரும் "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என மொழிந் தார். தமிழ்ப்பாஷையிலுள்ள கீழ்க்கணக்கு நூல்களெல்லாம் அறத் தினைப் பெரிதுங் கூறி, பொருளின்பங்களைச் சிறுபான்மையாகக் கூறுவனவாம். அவற்றுள் தமிழ் மறையாய திருக்குறளானது அறம் பொருளின்பம் வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் உணர்த்தும் நூலாம். அதற்கிணையான நூல் எப்பாஷையிலு மின்றென்பது தேற் றம். அது முப்பாலாகப் பகுக்கப்பட்டதாயினும்—கடவுள் வாழ்த்துக் கூறிய முதலதிகாரத்தே பதிக்கிலக்கணங் கூறியிருத்தலானும், துறவு மெய்யுணர்வு முதலிய அதிகாரங்களான் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறி யிருத்தலானும் வீடுங் கூறி இருப்பதாகவே கோடற்பாற்று. அகநானூறு சிந்தாமணி முதலியவை இன்பமொன்றையே பெரிதுங் கூறு நூல்களாம். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலியவை வீடு ஒன்றையே கூறும்ஞான நூல்களாம். தேவாரம், திருவாசகம் முதலிய அருணூல்கள்

வீடொன்றினையே தோத்திர ரூபமாகக் கூறுதலன்றியும் வீட்டினைப்
பயந்தேவிடக்கூடிய நூல்களாம். யானை, குதிரை, தேர், படைக்கல
மென்றிவற்றினூல்களும், ஓவியம், கூத்து முதலிய நூல்களும், தேச
சரித்திரம், பூகோள ககோள சாஸ்திரம் என்பவைகளும், ஜட தத்துவ
சாஸ்திரங்களும் இன்னோரன்ன பிறவும் அறம் பொருளின்ப நூல்
களுள் அடங்குமாறறிந்தடக்கிக் கொள்க. யோகம், வேதாந்தம் முதலிய
நூல்களை வீட்டு நூலின் பாற் படுத்துக. இதிகாச புராணங்களில் பலவும்
விரவிக்கிடத்தல் காண்க.

4. நூல்கள் ஒவ்வொரு துறையிலும் எண்ணிலவாய்ப் பரந்து வரம்
பின்றிக் கிடத்தலின் அவைகளை முற்றக்கற்றலென்பது இல்வாழ்நாட்பல்
பிணிசிற்றறிவினராய மக்கட்கு இயலாததே. ஆதலின் தம்முடைய
காலம் அறிவு முதலியவற்றிற் கேற்ப உறுதிப்பொருளை யுணர்த்தும்
நூல்கள் சிலவற்றைத் தெரிந்துபடித்தலே தகுதி. கருவிநூல்களாகிய
இலக்கணம் முதலியவையும் வேண்டற்பாலனவே. நாலடியாரிலும்
"கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல, தெள்ளி
தின், ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப், பாலுண்குருகிற் றெரி
ந்து" என்று கூறியிருத்தலறியத்தக்கது. அங்ஙனம் கற்கத்தகுந்த
வாய நூல்களைக்கல்வி நிறைந்த ஆசிரியனையடுத்து வழிபாடு புரிந்து
கேட்டுப் பயிறலே தகுதியும் நலமுமாம். ஏனெனில் ஆசிரியனுதவி
யின்றிக் கற்பான்புகுந்தவர்களில் அதிதீவிர புத்தியுடைய சிலரன்றிப்
பெரும்பாலார் குன்றுமுட்டிய குரீஇப்போல நூற்கணுழைகலாற்றாது
விட்டொழிதலானும், நுழையினும் சந்தேக விபரீதங்களுட்பட்டு மெய்ப்
பொருள் காணாது பயனிழப்பராகலானும், தீவிரபுத்தியுடையாரும்
குணவயத்தானும் பழக்கவயத்தானும் அறிவுதிரிதலிற்றேற்றம் பெறா
ராகலானுமென்க. அதுபற்றியே குமரகுருபரரும் "எத்துணைய வாயி
னுங் கல்வியிடனறிந்-துய்த்துணர் வின்றெனினின்றாகும்" என்றார்.
உலகநூல்களை யொரோவழித்தாமே கற்றல் அமையுமாயினும் ஞானநூல்
களை அங்ஙனங்கற்றல் கூடாதென்றே ஆன்றோர் கூறியுள்ளார். அங்ங
னங் கூறியதற்குக் காரணமும், தாமே கற்பான் புகுந்தவர் பொருளைப்
பொருளன்றென்றும் பொருளல்லவற்றைப் பொருளென்றுந் துணித
லின் பதிவாக்காகிய வேத சிவாகமங்களுக்கும் அவற்றின் வழித்தோன்
றிய தேவார திருவாசகாதி நூல்கட்கும் குற்றங்கூறத் தலைப்பட்டு
அந்தோ! கொடுநிரயத்தழுந்துவரே யென்னும் இரக்கமே யென்க.
"உடையார்முன் இல்லார்போ லேக்கற்றுங்கற்றார்-கடையரே கல்லாதவர்"
ஆகலின் ஆசிரியன் எவ்வருணத்துப் பிறந்தானாயினும் உடல்வழித்தா

குஞ்சரிலையை நோக்காது அவனைப் பணிந்து கற்றலே உறுதியும் மேன்மையுமாம்.

ஒருவன், ஆசிரியனை யடுத்துப் பாடங்கேட்டாலும் அதனானே புலமை நிரம்பியவனுமாகான் என்னை? 'ஆசானுரைத்த தமைவரக் கொளினுங் காற்கூறல்லது பற்றலனாகும்'' என்பவாகலின், படிப்போர் படித்தோராய அனைவரும் தம்போல்வாரோடு பயிலுதல் அவசியம். பயிலுங்கால் தாமுணர்ந்த அரும்பொருள்களைப் பிறரெளிதினறியுமாறு சொல்லியும், "உணற்கினிய வின்னீர்பிறிதுழியில் லென்னும், கிணற்றகத்துத் தேரை" போலாகாது, அவருணர்ந்த அரும்பொருள்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டும் மாசுதீர்தல் வேண்டும். என்னை? "எண்பொருளவாகச் செலச்சொலித் தான்பிறர்வாய் நுண்பொருள் காண்பதறிவு" என்பது தமிழ்மறையாகலின் பலநூல் படித்தோமென்று பாராட்டிக்கொள்ளுதற்காக மேல் நோக்காகப்பலநூல்களிலுஞ் செல்லற்க. "நூல் பலகற்றானேனும் பொருள் நுனித்தறியானென்னின் மாலொடும் வாளாகத்தும் மாநிறக்காகம் போல்வன்."

அன்றியுங் கற்றுவல்லானொருவன் தான் ஆசிரியனாகவிருந்து மாணவர் பலர்க்குப் போதிகக்வேண்டும். அதுவே புலமை நிரம்புதற்கு வழியுமாம். "பிறர்க்குரையிடத்தே நூற்கலப்பாகும்'' என்பவாகலின் முழுதுமுணர்ந்தோரொருவரு மிலராகலானும், "அறிதோறறியாமை" காணப்படுமாகலானும், கல்வியில் சிறுவனாலும் ஒரோவழிவெல்லப்படுதல் கூடுமாகலானும் தாம் ஒருங்குணர்ந்தாராகச் சிலர் நடித்துக்கொள்வது பேதைமையின்பாற்படுமன்றி வேறில்லை. தானெல்லாம் வல்லனாக நடிப்பவன் ஒன்றினும் வலியில்லாதவனே யாவன். தான் பார்த்தறியாத நூலையும் படித்துணர்ந்ததாகப் பிதற்று மொருவன் தானுண்மையாகப் படித்தவற்றிலும் பிறரையுறுமாறு செய்துகொள்ளுகிறான். தன்னினுங்கற்றவரையே நோக்கி, இவரன்றோ படித்தவர்? யான் படித்ததெத்துணைப் புல்லிது! என்று மேலுங்கருத்தழிந்து படித்து வருபவனே புலமை நிரம்பப் பெறுவான். சிறுவரிடத்திருந்தும் பெரிய பொருளைக் கொள்ள வேண்டும். கீழ்மக்களிடத்திருந்தும் மேலான பொருளைக்கொள்ள வேண்டும். குணகுற்றங்களைப் பிரித்தறிந்து குணத்தைக் கொண்டு குற்றத்தைத் தள்ளுதலே விவேகிகள் கடமை. குற்றத்தையே கொள்ளுவோர் அவிவேகிகள் "நிறைகுடம் நீர்தளும்பலில்'' என்றபடி நிறைந்த கல்வியுடையார் மாட்டுப் பணிவுதானே யுண்டாகும். "கல்விசேர் மாந்தரினிறைஞ்சி" என்றதுங் காண்க. அற்பக்கல்வியுடையாரே செருக்குற்றுத்

திரிவர். அவர் அதனானே தமக்குள்ள அற்பக்கல்வியையும் இழந்து விடுகின்றார். செருக்குறவழியுங் கற்ற கல்வி யல்லவா? கற்றவர்கட்குச் சொல்வன்மை யொருதலை யாகவேண்டும். சொல்வன்மை யென்பது தாங்கற்றவைகளைப் பிறரறிய விரித்துரைத்தலே. பிறரறியவென்றது பாடங்கேட்கும் மாணவரும் அவையிலிருந்து கேட்கும் பெரியோருமறிய வென்றபடி. அவ்வன்மையைப் பெறாதவர் மணமில்லாத பூவை யொப்பர். 'இணரூழ்த்து நாறாமலரனையர் கற்ற-துணரவிரித் துரையா தார்' என்பது பொய்யாமொழி.

இனிக்கற்றவர்க் குறுதிபயப்பதாய், குறிக்கொண்டு காத்தற் பாலது ஒழுக்கம். கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் நூல்களிற் சொன்ன வாறொழுகுதலுமேயாம். அவ்வொழுக்கமில்வழிக் கல்வியான் யாதும் பயனில்லை. அப்பொழுது "கல்லாத பேர்களே நல்லவர்கள்" ஆவார்கள். இதுகாறுங் கூறிப்போந்தவையனைத்தும் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்னும் அருமைத் திருக்குற ளொன்றின் விரிவுரையாதல் அறிவுடையோர் அறிதற்பாலது.

5. இனிக்கல்வியின் பயன் இன்னவென்பதைப் பற்றிச் சிறிது கூறி இவ்வியாசத்தை முடிப்பேன். "அறம்பொருளின்பம் வீடடை தனூற்பயனே" என்றபடி தருமார்த்த காமமோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களையு மடைதலே பயனும். கல்வி, அறத்தை யெங்ஙன் பயக்குமென்றால்—அறமாவது தருமசாஸ்திரங்களில் விதித்தவற்றைச் செய்தலும், விலக்கி யவற்றைத் தவிர்தலுமே யாகலின் கல்வியொன்றுமே அறத்தினைப்பயக்குமென்க. அது பொருள் பயத்தல் கண்கூடாகலின் அதனையீண்டெழுதல் வேண்டா. மற்று இன்பம் பயத்த லெவ்வா றெனில்—கல்வியானே பொருளீட்டியான் அதனானே நுகரப்படுவன வெல்லாங் கொண்டு நுகருமாற்றான் நுகர்தலானே யின்பமெய்து மென்க. அறம்புரிந்து துறக்கத்துச் சென்றெய்து மின்பமுங் கொள்க. அன்றிப்புகழான் வருமின்பம் பெரிதன்றோ?

அன்றிக்கற்குந்தொறுங் கற்குந்தொறும் கவிகளின் கற்பனாலங்கா ரங்களையும், சொற் பொருணயங்களையும் சுவைத்து எய்து மின்பத்திற் கோரெல்லையுண்டோ? அவ்விதம் இன்பம் விளைத்தலில் நம் தமிழ்ப்பாஷை மிகச் சிறந்ததன்றோ! நூல்கள் இன்பம் பயக்குமென்பதைக் குறித்து "ஆயுந்தொறுந் தொறுமின்பந் தருங்கல்வி" "தேருந் தொறுமினிதாந் தமிழ்போன்று" "நவிறொறு நூனயம் போலும்" "தாமின்புறுவதுலகின் புறக்கண்டு-காமுறுவர் கற்றறிந்தார்" என ஆன்றோர் பலருங் கூறி யிருத்தல் காண்க.

இனி வீடுபயத்த லெவ்வாறெனில்:—கல்வியானன்றி ஞானமுண்டாகாதாகலானும், கண்ணப்பர் முதலாயினோரும் முற்பிறப்பிற் கற்றவர்களே யாகலானும், அதுபற்றியே "கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பற்கடியேன் என அடைகொடுத்துக் கூறியதாகலானும், ஞானத்தானன்றித் தன்னையும் பதியையுமுணர்ந்து அன்புசெய்து இன்பெய்துதல் கூடாமையானும்,"கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை" என்றும், "கல்லாதார் நெஞ்சத்துக்காண வொண்ணாதே" என்றும் ஆன்றோர் திருவாய் மலர்ந்தருளினா ராகலானும் வீட்டிற்குக் கல்வியே பரம்பரையிற் காரணமாமெனக. தளர்ந்த விடத்துதவுதலையும் புறக்கடை நல்லிசை நாட்டுதலையும் அவற்றொடுங் கூட்டியடக்குக.

கற்பக்கழிமடமஃகுமடமஃகப்
புற்கந்தீர்ந்திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவமான நெறிபடரு மந்நெறி யிப்பாலுலகத்திசை நிறீஇயுப்பால்
உயர்ந்தவுலகம் புகும். (நான்மணிக்கடிகை.)

மு. வேங்கடசாமி நாட்டார்,
தலைமைத் தமிழ்ப் புலவர்,
S. P. G. காலேஜ்.

## எரிமலைகள்:—அவற்றின் தோற்றமும் உற்பத்தியும்.

இப்பூவுலகினில் அமைந்துள்ள எரிமலைகளின் விசித்திரத்தைப் பற்றியும் உக்கிரத்தைப் பற்றியும் படித்துங் கேட்டும் நேராகக் கண்ணாற் பார்த்து முள்ளவர்கள் அவைகளைச் சிருஷ்டித்த எல்லாம் வல்லரான கடவுளின் மகிமையைக் கொண்டாடுவார்கள் என்பது திண்ணம். உலகத்திலுள்ள எரிமலைகளைக் கணக்கிடுவது அனேகமாய் அசாத்தியமான காரியமென்றே சொல்லவேண்டும். சிலர் 225 என்றும் சிலர் 300 என்றுஞ் சொல்லுகிறார்கள். சிலமலைகள் எப்பொழுதும் உக்கிரமாகவே இருக்கின்றன; ஆனால் பெரும்பான்மை சிற்சில காலங்களில் உக்கிரமாக இருப்பதாகத் தோற்றுகிறது; ஆகையால் பின்சொல்லப்பட்டவைகளில் எவைகளின் உக்கிரம் பூராவாக ஒடுங்கி விட்டதென்றும் எவைகளின் உக்கிரம் அவ்வாறு ஒடுங்காமல் பின்னொருகாலத்தில்

தோன்றுமென்றுஞ் சொல்லக்கூடவில்லை. மேலும், அம்மலைகளில் எவை பிரதானமானவைகளென்றும் மற்று மெவைகள் அவற்றினின்றும் பிரிந்த கிளைகளென்றும் வகுத்தெடுக்கக்கூடவில்லை. எட்னு (Etna) எரிமலையின் சார்பில் சுமார் 700 கிளைகளும், ஹாவே (Hawaii) எரிமலையினின்றும் அனேக ஆயிரக்கணக்கான பிரிவுகளும் இருக்கிறதென்றும் தெரியவருகிறது.

சிம்பரோசா, (Chimbaroza) கொடபாக்ஸி, (Cotopaxi) ப்யூசியாமா Fusiama என்பவைகளின் சிகரங்கள் வெகு ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் அமையப் பெற்றுள்ளன. ஏனெனில் அவைகளினின்றும் உருகிப் பெருகிய எரிகுழம்பு பூமியின் ஓர் பிளப்பினின்றும் (Fissures) வெளிக் கிளம்பி மலைஉச்சியின்மேல் தங்கும்போது நாளடைவில் குளிர்ச்சியால் இறுகிக் கெட்டியாகவும் கோன் (cone) வடிவமாகவும் மலைச்சாரலில் அமைந்துள்ளது ஆதலினால்தான் கிரேட்டர் (crater) என்று சொல்லப்படுகிற எரிமலையின் மேல்வாயில் அம்மலையின் உச்சியில் காணப்படுகிறது.

எரிமலையின் உக்கிரத்தின் போது அதில் உண்டாகும் காக்ஷிகளை நேரகப் பார்த்தாலல்லது எடுத்துக் கூறுவது பூர்ணமாய் இராது. எரிமலையின் வாயிலிலிருந்து கற்குழம்பு வழிந்தோடவும் பெரும்பாறைகளுங்கற்களும் ஆகாயத்தில் அதிர்ச்சியால் அதிவேகத்தோடு கிளம்புவதும் அதியற்புதமாகவே இருக்கும். கிலேனியா (Kilanea) என்ற எரிமலையின் வாயில் உலகத்திலுள்ள மற்றெல்லாவற்றிலும் பெரிது. இது காவையின் Hawain என்ற தீவில் மூனலோ (Mouna Loa) என்ற மலையின்மேல் 4000 அடி உயரத்தில் இருக்கிறது. அது 3 சதுர மைல் பரப்புள்ளதாயும் 7 மைல் நீளமுள்ள கரையையுடையதாகவும் அதன் உட்புறம் கற்குழம் பாலாகிய பெரிய ஏரிபோன்றும் இருக்கிறது. அந்த ஏரியின் மட்டம் 800 அடி ஆழத்திலும் எரிகுழம்பு 1400 அடி ஆழமுள்ளதாகவும் இருக்கிறது. இது அதிக கொதிப்பும் உஷ்ணமுமுள்ளது, இராக்காலங்களில் கற்குழம்பின் எதிர் வெளிச்சத்தால் மேகங்கள் சிவந்த நிறத்தையடைகின்ற காக்ஷியே மிகவும் கம்பீரமானதென்று சொல்லுகிறார்கள். நாளாக நாளாகக் கற்குழம்பு எரிவாயிலின் மேல் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி பக்கங்களில் உடைத்துக்கொண்டாவது மேல் புறத்தில் வழிந்தோடியாவது போனபிறகு எரிவாயிலில் ஒன்றுமில்லாமற் போகும். அதன் பிறகு வருஷக்கணக்காக அவ்வாறே ஒன்றும் சம்பவிசாமல் இருக்கும். கற்குழம்பு எரிகிற ஆறு போல மலையின் சார்பில் முதல் முதல் அதிகவேகமாக ஓடும். பிறகு குளிர்ச்சியால் உருகிய உருக்குக்கல் போன்ற மலைக்கிட்டங்க

ளாக மாறிவிடுகின்றது. அம்மலைக் கிட்டங்களுக்கு ஸ்கோரி (Scoriae) என்று பெயர். கடைசியாக உருகியகுழம்பு மேல் புறமும் பக்கங்களிலும் உறைந்து கெட்டியாகி ஒரு (tunnel) குழாய் மாதிரியாகி அதின் வழி யாக அவ்வெரிவாயிலினின்றும் உண்டாகிற உருகுகிற கற்குழம்பு ஓடு கிறது. அவ்வாறு ஓடும்பொழுது இங்குமங்கும் குழாயினின்று பிளந்து அப்பிளப்பின் வழியாகவும் வரும். இவ்விதமாக அந்தப் பயங்கரமான கற் குழம்பாறுனிது மார்க்கத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் அழித்துக் கொண்டு புறப்படுகிறது.

1885-ஆ மூனலோ (Mouna Loa) என்றஎரிமலையினின்றும்புறப் பட்ட கற்குழம்பாறு 70 மைல் தூரம் ஓடிற்றும். 1783-ஆ ஐஸ்லாந்தில் (Iceland-ல்) ஸ்பெக்டர் ஜோகுல் (Scapter-Jokul) என்ற எரிமலையி னின்றும் வழிந்தோடிய ஆறு 500 அடி ஆழமுள்ளதாய் 50 மைல் நீளம் ஓடிற்றும்.

எரிமலைகளினின்றும் புறப்படுகிற கல்,பாறை,சாம்பல், மண் இவை கள் கற்குழம்பாறைக்காட்டிலும் அதிகமாக நாசத்தைச் செய்யக்கூடும். 1755-ஆல் லிஸ்பன் நகரத்திலுண்டான பூகம்பத்தில் 60000 ஜனங்கள் உயிர்துறந்தார்களாம். 526-ஆல் ஆன்டியோக் (Antioch-ல்) உண்டான பூகம்பத்தில் 2 லக்ஷம் ஜனங்கள் இறந்தார்கள். காசிகுயுன (Cosequina) என்ற எரிமலையினுல் உண்டான சேதம் கணக்கிடக்கூடாததாக இருக்கி றது. 16 அடி ஆழமுள்ள சேற்றுத்தண்ணீர் 25 மைல் விஸ்தீரணம் பூமியில் பரவிற்று. கல்லும் சாம்பலும் அனேக மைல் தூரம் பெரிய மேகம்போல் அடர்த்தியாய்ப் பரவி வெகுதூரம் காற்றுல் அடிபட்டுக் கொண்டு போகப்பட்டதாம்.

ஸ்டாம்போலி (Strom Boli) 2500 அடி உயரமும் சமுத்திரத்தின் நீர்மட்டத்திற்குகீழ் 4000 அடி ஆழத்தில் வேரூன்றியும் வெகு ஒழுங்காக வும்அழகுடன் (Mediterranean) மத்திய தரைக்கடலில் அமைந்திருக் கிறது. பார்வைக்கு ஒழுங்காக இருத்தலுடன் 4 அல்லது 5 நிமிஷத்திற் கொருதடவை தன் உக்கிரத்தைக் காண்பிக்கிறது. அதன் எரிவாயிலி னின்றும் உள்ளேபார்த்தால் கற்குழம்பின் மட்டம் 300அடி ஆழத்திலும் சற்றுநேரத்திற்கெல்லாம் பொங்கிமேலேவந்து கற்களையும் அக்கினிவாயு வையும் வெளிப்படுத்திப் பிறகு ஓய்ந்துபோகும். இம்மாதிரி 5 நிமிஷத் திற்கொரு தடவை வெளிக்கிளம்புவதும் பிறகு தணிவதுமாக அனேக காலமாக நடந்துகொண்டு வருகிறது. அவ்வெரிமலையை எப்பொழு தும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற (flashing light house) விளக் குக் கூண்டிற்கு ஒப்பிடுகிருர்கள்.

சில சமயங்களில் எரிமலையின் சிகரங்கள் பூராவாகவும் அம்மலையி னின்றும் எடுபட்டு விடுகின்றன. அவ்வாறு சிகரங்கள் எடுபட்டுப் போனவைகளுக்கு (Vesuvius) வெஸுவியஸ் என்ற எரிமலையே திருஷ்டாந்தம். 79-ஆண்டில் அதிலுண்டாகிய உக்கிரத்தால் பாம்பி, ஹெருக்கிலேனியம் (Pompeii, Herculaneum) என்ற பட்டணங்கள் அழிந்துபோயின. பிறகு சமீபத்தில் ஏற்பட்ட உக்கிரத்தால் மலையின் உச்சியே பேர்ப்புண்டு சுமார் 200 அடி வரையில மலையினின்றும் ஆகாயத்தில் வீசி எறியப்பட்டதாம்.

(இன்னும் வரும்.)

Trichinopoly 25—4—11

R. RAMAIYA.
Lecturer in Science,
S. P. G. College.

ஸ்ரீராமஜயம்

முற்றொடர்ச்சி

இன்னும் இச்செய்யுளின் பொருளருமையைக் கருதியன்றோ பிற்காலத்தவர் [illegible] என்று வடமொழியிலும் இதனை மொழிபெயர்த்து வழங்கி வருகின்றனர்.

இனி,

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடியவரக்கர் சேனை நீறுபட்டழியவாகை
சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கே.

என்றது இராமாயணத்தின் பயன் கூறிய செய்யுள்களுள் முதலது.

இராவணாதி யரக்கர்களையும் அவர்களுடைய சேனைகளையுங் கொன்று, வெற்றிமாலையைச்சூடிய வில்லையுடைய ஸ்ரீராமபிரானது தோள்வலியைக் கூறுவோர்க்கு விரும்பிய பொருள் கைகூடும்; ஞானமும்புகழுமுண்டாகும்; மோக்ஷங்கிடைக்கும்; திருமகள் அருள் செய்வாளென்பது இதற்குத் திரண்டபொருள். தோள்வலி கூறுவோர்க்கு நாடிய பொருள் கைகூடும் என ஈறும் முதலுங் கூட்டி விற்பூட்டாகப் பொருள் கொள்ளப்பட்டது.

"நாடிய பொருள் கை கூடும்" எனவே விரும்பிய எல்லாப் பொருளுங் கை கூடும் என்று அமைந்து கிடக்க மேலும் ஞானமும் புகழுமுண்

டாம் என்பது முதலிய தொடர்களைக் கூறியது மிகையாமெனின், அற்றன்று; எல்லாப்பொருளும் பெறுதற்கு இன்றியமையாக்காரணமாதல் பற்றி யாவராலும் நாடப்படுவன கல்வியுஞ் செல்வமுமே யாகலின் இங்கு நாடிய பொருளென்றது கல்வியுஞ் செல்வமுமென்ற இரண்டையுமே யென்க, "நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்குமஃதிடம்" எனச் சிந்தாமணியினும் இதுபோலக் கல்வி செல்வமென்ற விரண்டையுமே பொருளெனக் கூறியிருத்தல் காண்க.

இனி அக்கல்வி செல்வங்களால் முறையே ஞானமும் புகழுமுண்டாம் எனக்கிரமாலங்காரத்தாற் கூறியதும், பாச நீக்கமும் தருந்த வழியால் (விரஜாநதியின் வழியால்) சென்று அடையத்தக்க பரம பதமுமென மோக்ஷம் இருவகைப்படுமென்னுஞ் சாஸ்திரக் கருத்தை வெளிப்படுத்துமாறு வீடியல் வழியதாக்குமெனக்கூறியதும் ஆழமுடைத்தாதல் என்னும் அழகைத்தருகின்றன வன்றோ!

வீடு = பாசநீக்கம். இயல்வழியது = தருந்த வழியாற்சென்று அடையத்தக்க பரமபதம்.

அன்றியும், இராமாயண பாராயணஞ் செய்வார்க்கு அருள்செய்ய அவாது சமயத்தைத் திருமகள் எதிர்பார்ப்பாள் என்ற பொருள்பட வேரியங்கமலை நோக்கும் என்றதும் வியக்கத்தக்கது. வேரியங்கமலை = தாமரைமலரிலிருக்கின்ற திருமகள் இன்னும், எல்லாம் இராமாயண படனத்தால் தாமே வந்து கூடும்; மோக்ஷம் ஒன்றையும் ஞானமே தரத்தக்கதீ என்ற உண்மையைத் தெரிவிக்க, ராமாயணபாராயணத்தால் ஞானம் உண்டாக அந்த ஞானம் மோக்ஷத்தை யுண்டாக்கும் என்னும் பொருள்படக், கைகூடும், உண்டாம், நோக்கும், என இரண்டு பக்கத்திலும் தன்வினையாற் பயனிலை கூறியவர் இடையில் வீடியல் வழியதாக்கும் எனப் பிறவினையாற் கூறியதும் கருதத்தக்கதே.

இனி, வீடியல்வழியதாக்கும் என்பதைக் கமலைக்கு அடைமொழியாக்கிப் பெயரெச்சமெனக் கோடலுமொன்று. இதற்குப் புருஷகாரமாகிய திருமகளெனப் பொருள் கொள்க.

இங்ஙனம் மேல் இரண்டடிகளாற் பயன்கூறப்பட்டது.

இனி, அரக்கர் இறந்தும் அவர் உடற்சாம்பல் இருக்கின், அதுவும் அவருடல் இருத்தலோடொக்குமாகலான், சாம்பலாய்ப் பிறகு அச்சாம்பலும் இல்லையாயிற்று என்னும் பொருள்பட நீறுபட்டு என்று ஒழியாது பின்னும் அழியவென்ற நயத்தையும் நன்கு கவனிக்க. இனி திருமாலும் நிகரற்ற வீரனுமாகிய ஸ்ரீராமபிரான் தமக்கு எத்துணையும்

ஸ்ரீராகாத ராவணன் முதலிய அரக்கரைக்கொன்று அந்த வெற்றிக்கு அடையாளமாக வெற்றிமாலையைச் சூடிக்கொண்டார் என்றல் அவ்வாறு பெருமைக்குச் சிறிதும் ஒவ்வாதிருக்க, அதற்கு மாறாக இங்கு வாகை சூடிய சிலையிராமன் என்றது பொருந்ாதெனின், அற்றன்று; திருமால் தம்முடைய பஞ்சாயுதங்களுள் சக்கராயுதமே தமக்குச் சத்துரு ஜயத்துக்குப்பல முறை சாதனமாயிருக்கவும் இம்முறை ராவண சங்காரத்திற்கு அங்ஙனமின்றிச் சார்ங்கமாகிய இவ்வில் சாதனமானதுபற்றி வெற்றிமாலையை அச்சார்ங்கத்துக்குச் சூட்டினராதலின், வெற்றிமாலை சூட்டப்பெற்ற வில்லையுடைய ராமன் எனப்பொருள்பட்டுப் பொருந்துமென்க.

மேலும், இராமபிரானுக்குத திருமால் என்பதற்குத் தக்க விசேடணங் கூறாது சாமானியமாய ஒரு வேடனை வில்வேடன் என்றாற்போலச் சிலையிராமன் என்றது குற்றமன்றோவெனின், நன்று கூறினாய்! இங்ஙனம் கூறியதாலன்றோ பரசுராமன் ஸ்ரீராமன் பலராமன் என்ற திருமாலுடைய மூன்று ராமாவதாரங்களுள் இங்குச் சொல்லியது ஸ்ரீ கோதண்ட ராமனை யென்ற பொருள் பெறப்பட்டது. ஆதலால் அதுவே குணமென்க.

(இன்னும் வரும்.)

த. ரு. சுப்பிரமணியஐயர்.
தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல்.

உ

## அஞைப்புதல். (வஞ்சித்தல்.)

அஞைப்புதல் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் வஞ்சித்தல் அல்லது ஏமாற்றுதலென்பது. பிறர் தம்மை அஞைப்பும் வழியை யறிந்துகொண்டாலல்லாமல் தம்பொருளையுந் தம்மையுங் காத்து நடத்தல் அரிதாகலால் இது பொருட் பகுதியிலடங்கும்.

உலகத்தில் வஞ்சிப்போர் பெரும்பாலர். ஏமாறுவோர் அதினும்

பெருமை பகுதியர். ஒருவரிடத்தில் ஏமாறினவன் வேறொருவனை ஏமாற்று கின்றான். இத்தன்மையரும் மிகப்பெருங் கூட்டத்தார். ஆகையால் இவைகளைக் கவனித்து ஏமாறாதிருக்க வழியைத் தேடவேண்டும்

எவர் சொல்லிலும் கேட்டவளவிலேயே முழுநம்பிக்கை வைத்து விடலாகாது. நம்பாதிருக்கவுங்கூடாது. சொல்லுவோர் தன்மையா லும் சாட்சியத்தாலும் அனுபவத்தாலும் சோதித்தே நம்பவேண்டும்.

ஏமாற்ற விரும்பினோன் ஏமாறினதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை கூறுவாம்.

மேலைநாட்டிலே ஒரு சிற்றூரில் பலரையும் ஏமாற்றுதலில் வல்ல ஒரு தனவானிருந்தான். ஒருநாள் கவிராயரொருவர் அவன் இல்லத் தை நாடிச்சென்று காலை முதல் மாலை வரையில் காத்திருந்தும் அவ் வில்லத்தலைவனாகிய தனவான் காட்சி கொடாமையால் வருந்தி, நா மின்று இவ்வீட்டையடைந்து பகலெல்லாம் பசியாயிருந்ததுமன்றி இர வெல்லாம் பசித்திருக்க நேர்ந்தது, நமக்குக் கடவுள் துணையிருப்பார் என்று அவ்வீட்டு வெளித்திண்ணையிலேயே படுத்து நித்திரை செய் தார்.

இரவு பத்து மணிக்கு மேல் சாப்பாடானபின் அத்தனவான் புல வரைக் கூவியழைத்து "யாரையா நீர்?" "எங்கிருந்து வந்தீர்?" என்று வினவினான். அதற்கு அவர், மகாப்பிரபு! நான் தென்தேயத்துக் கவி ராயன் தங்கள் கொடைத்திறத்தைக் கேள்வியுற்று, என் கல்விவன்மை யைக் காட்டித் தங்களிடத்தில் பரிசுபெற வந்தேன், ஏனென்றுங் கேளாமையால் சயனித்திருக்கிறேனென்றார். தனவான், "உமக்கு என்ன தெரியும்" என்றான். அதற்கவா "நான் கவிபாடுவேன் பாரதப் பிரசங்கஞ் செய்வேன என்றார்." தனவான், "உமக்கு இராமாயணந் தெரியுமா" என்றார். அதற்குக் கவிராயர் 'இராமாயணம் படிக்கவும் பொருள் சொல்லவும் காண்பிக்கவுந் தெரியும்" என்று மறுமொழி கூறினார்.

இது கேட்டுத் தனவான், கவிராயரை, ராமாயணத்தைக் காட்டச் சொல்லி அனுப்பி யனுப்பி விடலாமென்று நினைத்துக் கதவைத் திறந்து வெளியில் வந்து உமக்கு இராமாயணங் காட்டத் தெரியுமென் றீரேயெங்கே காட்டும் பார்ப்போம் என்றான். உடனே கவிராயர் எழுந்து உட்கார்ந்து "ஐயா உங்கள் வீட்டிலுள்ள பழங்கந்தைகளையும் ஒரு பானை எண்ணெய்யையுங் கொடுத்தால் யான் காண்பிக்கத் தடையில்லை" என்

ரூர். தனவான் அவ்வண்ணமே கந்தைகளையும் எண்ணெய்யையுங் கொணர்ந்து கொடுத்துக் காட்டும் என்றான். புலவர், கந்தைகளை யெல்லாம் திரியாகத்திரித்து அரையில் கட்டிப் பின்னால் வால்போலத் தொங்கவிட்டுப் பானை எண்ணெய்யில் தோய்த்து நனைத்துத் தனவா னிடத்திலேயே தீக்குச்சியையும் பெற்றுத் திரியில் கொளுத்திக் கொண்டு, சீரகம் பெரிய கொட்டகை போன்று ஆகாயத்தை அள வப் புல்லினாலேயே வேயப்பட்ட தனவானுடைய வீட்டின் தாழ்வாரக் காலின்மீது கவிபோலப் (குரங்கு) பாய்ந்தேறி முன்ன மனுமான் இலங்கை யைக்கொளுத்தி யழித்தவாறு தனவான் வீட்டைக் கொளுத்தி யழித்து அரையிற் கட்டியிருந்த திரியை யவிழ்த்துவிட்டுக் கீழேயிறங்கி விட்டார்.

தனவான் தன் மனையைக் கொளுத்தி யழித்ததற்காகக் கவிரா யரை மடிபிடித் திழுத்துக்கொண்டு அவ்வூர் நீதியதிபரிடம் போய் நடந்தசெய்தியைச் சொல்லிமுறையிட்டான்.

நீதிபதி கவிராயரை யாதெனை வினவ, அவர், "ஐயா இவர் இராமா யணங் காண்பிக்கும்படி அதற்கு வேண்டிய கருவிகளனைத்தையுந் தந்து உத்தரவையுந் தந்தமையால் இது செய்தேன் இனிமேல் நடக்க வேண்டிய வைகளைச் செய்து இராவணசம்மாரஞ் செய்யவேண்டு மென்று விளம்ப அங்குள்ளாரனைவரும் கலீலெனக் கடல் போலவி ரைந்து நகைத்தார்கள்.

நீதிபதி தனவானை நோக்கி உமது உத்தரவால் செய்தமையால் அவர் மேற் குற்றமில்லையென்று சொல்லிக் கவிராயரை யனுப்பிவிட்டு, நீர் சவிவல்லவரை அனுப்பநினைத்தீர் அவர் உம்மை அனுப்பிவிட்டார் என்று கூறி பல நீதிகளையும் எடுத்துச் சொல்லிப் புத்திபுகட்டித் தன வானையு மனுப்பினார்.

பத்திராதிபர்.

# வேதியர் வீட்டு விஸ்தார சம்பாஷணை விநோதம்.

"ஏ மன்னீ இ! எனக்கு இப்போ சாதம் போடரியா இல்லையா?" என்று பரட்டைத்தலைக் கிட்டன் வாசல் வாசற்படியிலே யிருந்தபடி ஒரு கத்துப்போட்டான்.

மன்னியோ இடுப்பிலே ஒரு குடம் கையிலே ஒரு குடம் எடுத்துக் கொண்டு ஜலம் தளும்பிக்கீழே விழுந்து விடுமோ என்று ஸர்வபயத்தோடு மெதுவாய் அடிவைத்துச் சென்றாள்.

"எவ்வளவு சாவகாசம் டாப்பா! நான் இதோ ஷர்ட்டு கோட்டு போட்டுக்கிண்டு புஸ்தகம் எடுத்தாச்சு; இப்போதான் தாலம் அலம்பப் போரா!" என்று இதற்குள்ளே உருமினான் கிட்டன்.

மன்னி "இதோ ஆச்சு" என்று மெதுவாய்ச் சொல்லிக்கொண்டே தாலம் அலம்பிக் கொண்டிருந்தாள்; இதற்குள்ளே வாசலிலே யிருந்து "ருக்மணி ருக்மணி ஏண்டிம்மா போனாத்தான் எத்தந்நாளி? ஆச்சு! சூத்திரச்சிகளெல்லாம் சண்டைக்கு வந்துட்டா! இன்னம் அண்டா கூட நிரையவில்லை" என்று ஒரு சத்தம் பிறந்தது. பறக்கப் பறக்கப் பாதி தேய்த்த தாலத்தை யலம்பி வைத்துக் குடமிரண்டையுமெடுத்துக் கொண்டு மாமியாருக்குப் பயந்து கிணற்றடிக்கு ஓடினாள். சந்து மூலை திரும்பினவுடனே, அடுத்தகத்திலே யிருக்கும் தன் புக்காத் துலத்தை மேலே நருக்குனு குடத்திட்டு ஒரு மோது மோதினாள். "அத்தை, அத்தை! தவரி இடிச்சூடுத்து, அத்தை அவசரமாயிருந்தேன், பெசகு" என்று முணுமுணுத்து நின்றாள். இதற்குள்ளே மாமியார் கைக்கயிற்றைத் தள்ளிவிட்டாள் அடுத்த வீட்டுக்காரி.

ஆகையால் ருக்மணியைக் கண்டவுடன் நியாயமாகவே மாமியாருக்குக் கோபமுண்டாய் விட்டது. ஆனால் நேரில் ஒன்றுஞ் சொல்லவில்லை. குடங்களை வாங்கி நக்கென்று திண்ணைமேலே எடுத்து வைத்தாள்.

"நம்ப சொன்னா ஏறாதா, நாட்டுப்பொண்ணே பொடச்சிருந்தா தெரியும்! ஒத்தர் சொல்லி இன்னொத்தர் கேக்காது இங்காதே சடையாது. பொறத்தை யாராத்துவாளைக் கோவிச்சுக்கப் போவானே

நம்பாத்துப்பேரே கூக்குரல் போட்டாலும் கேக்காதில்லே. —— எந் தூணைக் கட்டிக்கொண்டு நிக்கணும். ஆச்சு, இரண்டு குடம் இழுக் துண்டுவா' நான் போய் லக்ஷிமீ காவரிக்குப் போரத்துக்குள்ளே அரி மாமணையை வாங்கிக்கொண்டு வரேன்'' என்று சென்றனன் மாமியாரும்.

ருக்மணியோ இரண்டு குடம் இழுத்துக்கொண்டு வந்தாள். அகத்து வாசற்படி எறுவதற்கு முன்னே ஒரு குதிகுதித்துக் கிட்டன் புஸ்தகமுங் கையுமாய் ரயிலிக்குப் போய்விட்டான். கண்டவள் குடமுங் கையுமாய் வாசலிலேயே ஒரு நிமிஷம் நின்றாள். ஆனால் மாமியார் குரல் சந்துக் கடைசியில் கேட்டவுடன் உள்ளே நுழைந்து குடத்தை யிறக்கினாள். மாமியார் வரவில்லை. ஒரு யோசனை தோணிற்று. தாலத்தை யெடுத்து முன்போலே சாலகப் புரையிலே வைத்துவிட்டாள். இதற்குள் மூத்த நாட்டுப்பெண்ணும் மாமியாரும் வந்து சேர்ந்தார்கள்.

"நாலுங்கடக்க நடுவிலே, உனக்குக் காவேரிக்குப் போறதற்கு இப்பத்தானா ஆம்புட்டுதா. எஜமான் உயர யிருந்து இறங்க நாழியாச்சு ரயிலுக்குப் போகணும்னு வந்துடுவன் கிட்டு லக்ஷ்மணனும் சீனுவும் மடி பண்ணிக்கிண்டாச்சு. இன்னஞ் சந்தனம் கூட அரைக்கலே'' என்று இரைந்து கொண்டே மாடிக்குப்போய் விட்டாள் யஜமானி. மூத்த நாட்டுப் பெண்ணும் காவேரிக்குப் போய் விட்டாள். ருக்மணியும் சந்தனமரைத்து விட்டு இலை பேட்டுச்சாப் பாட்டுக்குத் தயாரித்தாள், உடனே யஜமானும் பிள்ளைகள் இருவரும் உட்கார்ந்தார்கள்; யஜமானியோ அதற்குள்ளே மாடியில் சட்டைகளும், கோர்ட்டுக்கட்டுகளும், விசிரி, வெற்றிலைப்பாக்கு முதலியவைகளும் தயாராய் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். நாலு நிமிஷத்தில் சாப்பாடும் முடிந்துவிட்டது.

ஐயரும் பிள்ளைகள் இருவரும் அவசரமாய்க் கச்சேரி சென்று விட்டனர். இதற்குள்ளே, ருக்மணிக்கு மனம் துடிக்கின்றது. 'சொல்லுவதா வாண்டாமா? அவாளாக் கேட்டால் தப்போ சரியோ பதில் சொல்லலாம். நாமாச்சொன்னாக் கோவித்துக்குவாளோ என்னமோ' என்று யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறாள். பத்து நிமிஷம் வரை மாமியார் வருவாளோ என்று பார்த்தாள். பிறகு வாசலில் வண்டி வந்ததோ வென்று பார்க்கச் சென்ற மாமியார் "அடியே ருக்கு! நீதான் அந்த

இலையிலே சாதத்தைவை'' என்று விட்டுப்போனாள். 'சிவனே' என்று இலையிலே சாதத்தைப் பரிமாறிவிட்டு, காவேரிக்குப் போய்வந்த ஓர்ப் படியைப் பார்த்து ''மன்னி'' என்றாள்.

''என்டி''? ''கிட்டு சாப்பிடாமல் ஓடிவிட்டான் கோட்டைக்கு தண் இழுத்துக்குண்டிருக்கரபோது 'சாதம் சாதம்' னு, பரந்தான் இழுத்துண்டு வரத்துக்குள்ளே ரயிலுக்கு ஓடிப்போயிட்டான்'' என்று கொண்டே கைச்சிப்பலோடே விமிர்ந்தாள்.

''அதுக்கு நானென்ன பண்ணரது?'' இதைக்கேட்டவுடன் கண்ணிலே கொஞ்சம் ஜலம் வந்துவிட்டது ருக்குமணிக்கு. லக்ஷ்மணனும் படையாள் இதைக்கண்டு 'சாதாரணமாயிருந்து தன்னு சொல்லிப் பிடுவேம்மா! இன்னிக்கின்னு அந்த அறுப்பா சேஷி மேலே யட்டா. தெடும்னு நானும் காவேரிக்கிப் போகவேண்டியிருந்தது. அம்மா அதுக்காக எம்மேலே ஏற்கனவே கோபம். இதையுஞ்சொன்னு ஆவேசங் கிளம்பிடும், ஆனு! அவா ஒருவேளை சாதம் மிஞ்சிப்போச் சென்னு கேப்பரோ என்னமோ?'' என்றாள்.

இதைக்கேட்டவுடன் சீனுவாம் படையாள் ருக்மணிக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது.

பாதிச்சாப்பாடாச்சு! மெள்ள மூத்த மன்னி ''அம்மா! சாதம் என்னமோ ஜாஸ்தியா மிஞ்சியிருக்கிறதே'' என்றாள்.

அதுக்கு மாமியார் ''அதுக்கென்ன, அரிசி ரெண்டுபிடி கூடப் போட்டிருப்பாள்! சின்னக்குட்டிதானே, ருக்கு! நீயே இத்தனை வயசாகியும் அன்னிக்கி உப்புமாவுக்கு உப்புப்போடாமல் கிண்டிவிட்டாயே. இன்னம் இந்தப் பிள்ளைகள் வேறே சரியாய்ச் சாப்பிடமாட்டேங்கிறதுகள். அவரே நெல்லிக்கா சாதம் சாப்பிடரார் அவருக்கும் குறைச்சலாய் சாப்பிடுகிறதுகள் இந்தப்பிள்ளைகள் ஏதாவது மருந்து பண்ணினுத் தேவல்லே'' யென்று பேசிக்கொண்டேயிருந்து விட்டாள்.

சாப்பாடானபிறகு சொல்லரதுன்னு பயமாயிருக்கு. எல்லாம் நடக்கறபடி நடக்கட்டும் என்று விட்டுவிட்டாள் ருக்குமணி.

(இன்னும் வரும்.)

A. வைத்தினுதய்யர்,
Hindu High School Musilipatam.

## நம் நாட்டுப் பெண்மணிகளின் தற்கால நிலைமை.

செந்தமிழ்ச் செல்வம் என்னும் இப்பத்திரிகையை வாசிக்கும் சகோதரிகளே!

இப்பத்திரிகையில் மாதர்களுக்கேற்ற சில வியாசங்கள் ஒவ்வொரு மாதமும் வெளிவரவேண்டுமென்று எனது குமாரராகிய இப்பத்திராதிபர் விரும்பி என்னிடத்திற் சொல்லியபோது, ஒவ்வொரு மாதமும் என் சிற்றறிவிற்கெட்டிய மட்டில் மாதர்களுக்கேற்ற பலவற்றை முறையே எழுதிச் சகோதரிகளாகிய உங்களையெல்லாம் களிப்பிக்கலாம என்னுந் துணிவு சிறிது உதித்தமையால் என் அறிவு அநுபோகங்களாற் கண்ட சில இன்றியமையாத விஷயங்களை ஒவ்வொரு மாதமும நானே எழுதிவருகிறேனென்று பத்திராதிபரிடம் வாக்களித்திருக்கின்றேன்.

பத்திராதிபரிடம் வாக்களித்த வண்ணம் இச் சஞ்சிகையில் எதைப்பற்றிய வியாசம் எழுதலாமென உள்ளத்துள்ளே யாராய்ந்தபொழுது "நமது நாட்டுப்பெண்மணிகளின் தற்கால நிலைமை" என்ற விஷயமே ஏற்றது என்று எனக்குப் புலப்பட்டமையால் சகோதரிகளாகிய நீங்கள் விரும்புவீர்களென நினைத்து எழுதுகின்றேன். நமது நாடு என்றபொழுது எது நமது நாடு? எது நமதல்லாததாகிய நாடு? என்று சிலர் கேட்க வரலாம். அவ்விதமாகக் கேட்க வரும் அவ்வளவு அழுத்தமாகிய வேதாந்த ஞானமுடைய சகோதரிகளுக்கு இது எழுதவாவில்லை. என்றாலும் எல்லா வீடும் நம் வீடு என்று நினைத்து நடந்தாலும் சில காரணம்பற்றிச் சில வீடுகளையே நம் வீடுகளென்று நினைத்து அவைகளிடத்து அதிகப்பற்று வைக்கிறோம். நாயகனோடு கூடிவாழும் பெண்ணுக்குத் தன்நாயகன் வீடே தன் வீடென்று தெரிந்திருந்தும் தன் நாயகனோடு பேசும்பொழுது தான் பிறந்த வீட்டை "எங்கள்வீடு." என்று சொல்லும் வழக்கத்தை அநுபோகத்தால் அறிந்திருக்கலாம். இது, பிறப்புக்காரணம் பற்றி வந்த அபிமானம். தன் தாய்வீட்டாரிடத்தும் மற்றையரிடத்தும் பேசும்பொழுது என் வீடு என்றபோது தன் நாயகன் வீட்டையே குறிக்கின்றதென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். இனி, தனக்கு மிக நெருக்கமாகிய தங்கை, தமக்கை முதலியவர்களின் வீடுகளைப்பற்றிப் பேசப்புகுங்கால் தமக்கு மிக நெருங்கிய உடற்பற்றுடையவளின் வீடாக இருந்தாலும் தங்கை வீடென்றுந் தமக்கை வீடென்றுஞ் சொல்லுவோமே யொழிய "என் வீடு" என்று நாம் சொல்லுகிற வழக்கம் இல்லை.

ஆனால் பிறரிடத்தில் தங்கை தமக்கை வீடுகளை "என் வீடு" என்றும் தங்கையிடத்திலேயே நமது வீடு என்றும் பேசும் வழக்கமும் உண்டே என்றாலோ? அது முறையே பிறருக்குத்தன் தங்கை தமக்கை வீடுகளில் தனக்கிருக்கும் உரிமை அல்லது அவர்கள் மாட்டுள்ள அன்பைக் காட்டு தற்கும் பேதமின்மையைக் காட்டுதற்காகவுஞ் சொல்லும் உரிமை வழக்கும் உபசார வழக்குமாகும்.

ஆகையால் நமது நாடு என்றது நாம் பிறக்கவும், மகிழ்ச்சியோடு இருக்கவும், நல்வினைகளைச் செய்யவும், ஞானத்தை யடையவும், முத்தியை (மோக்ஷம்) யடையவும் ஆதாரமாக விருக்கின்ற இந்த இந்தியா தேசத்தின் தமிழ் நாடுகளாம்.

இனி, நமது நாட்டுப் பெண்களின் தற்கால நிலைமை என்ற பொழுது நமது நாட்டுப் பெண்களின் முற்கால நிலைமை என்ன? மத்திய காலத்து நிலைமை என்ன? என்று தெரிந்துகொள்ள ஆசைவரும் ஆகையால் அவற்றையுஞ் சிறிது சொல்லுகின்றேன்.

முற்காலத்து, அதாவது, தமிழரசர்கள் காலத்து நமது நாட்டுப்பெண்களனைவரும் மிக உயர்ந்த நிலைமையிலேயே இருந்திருக்கிறார்களென்பதும், உயர்வாக மதிக்கப்பட்டு இருந்தார்களென்பதும் பழய காலத்துச் சரித்திர ஆராய்ச்சியால் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம. இதிகாச புராணங்களும் இதன் உண்மையை நன்றாய்க்காட்டும்.

பெண்கள் அக்காலத்து மிக்க கல்வி கற்றிருந்திருக்கிறார்கள் இதனை ஔவை, சூடாமலை, காஞ்சனமாலை, மங்கையர்க்கரசி முதலியவர்களின் சரிதத்தாலுணரலாம். இன்னும் பெண்கள் தம் ஆடவர்களுக்கு மதி வல்லமந்திரிகள் போலத்தக்க யோசனைகளைச் சொல்லி உதவிபுரிந்திருக்கிறார்கள். தம் நாயகருக்கு வந்த கஷ்டங்களையும் வருங் கஷ்டங்களையும் அறிந்து அவ்வவைகளுக்குத் தக்கபடி ஆன முயற்சிகள் செய்து தம் கணவரைக் காத்திருக்கின்றனர். இதன் உண்மைகளை சாவித்திரி தமயந்தி, சந்திரமதி, சீதை திரௌபதை முதலிய உயர்குலப் பெண்களின் சரித்திரங்களால நன்கு தெளியலாம்.

முற்காலத்துப் பெண்கள் எந்தெந்தவகையால் உயர்வு பெற்றிருந்தனர் என்பதை எல்லாம் எடுத்துரைப்பின் இதுவே பெரிய வியாசமாக விரியுமாதலால் இதனை இம்மட்டும் நிறுத்தி இடைநின்ற காலத்தில் நம் இனத்தாராய பெண்மக்கள் பட்டபாட்டைச் சிறிது சொல்லுகின்றேன்.

செவ்விய நமது தமிழரசர் காலத்திற்கும் கருணை பொருந்திய நமது ஆங்கில அரசர்களின காலத்திற்கும் மத்தியில் அரசாண்ட மகமதிய ராஜ்ய, துருக்கியர், பட்டாணியர், மொகலாயர் முதலிய வகுப்பைச் சார்ந்த அரசர்கள் நமது இந்தியாவில் அரசாட்சி செய்யப் புகுந்தபோது நம்மவர் பட்ட பாட்டை என்னென்று சொல்வது? எப்படி எழுதுவது? அந்தோ! நம் பெண்மக்கள் பட்ட பாட்டை நினைக்கும்போதே நெஞ்சந் துடிக்கின்றதே! பெண்களை மேற்சொல்லிய அரசர்கள் காலத்தில் சில கொடியர் கையினின்றுங் காக்கும்படி ஆண்மக்கள் பட்ட பாடு தான் பசரும் தரத்ததோ? இந்தக்காலத்தே தான் பெண்பாலாரின் பெருமையும் சுவாதீனமும் தட்டழிந்து தடுமாறியது. இவர்களுள்ளும் பல நல்ல அரசர்கள் இருந்தார்கள் என்றாலும் முற்காலத்தைய தன்மை முற்றும் மாறவேண்டியதாயிற்று. கொடியோர் நம் நாட்டுப்பெண்களைக் கற்பழிக்காவண்ணம் ஆடவர் பெண்களை வீட்டிலடைத்துப் பத்தரப் படுத்தநேர்ந்தது. இதனால் பெண்கள் கல்வி கற்கவோ உலகத்தையுணரவோ இடமில்லாதுபோய் அறிவு குன்றி உடல் வலியற்று ஏங்கித் தவிக்க நேர்ந்தது. இவ்விதமாகப் பெண்களை ஆண்மக்கள் வீட்டிலடைத்து வைசதுப் பிறர் கொண்டு போகாதபடி காவல் செய்வதோடு அவகக்கு வேண்டும் உண் பொருள் முதலியன சேகரித்தல் முதலிய சிரமங்களையுந் தாமே செய்ய நேர்ந்தது. இவை ஆடவர்களுக்குப் பெருஞ் சிரமமாகவே இருந்தன. பெண்பாலரோ, வெளிப்படுதற்கு முடியாதவராய்க் கற்றல முதலிய வற்றால் அறிவைப் பெருக்குதற்கும் முடியாதவராய் நாளுக்கு நாள் அறிவும வலுவுங் குன்றி ஆடவர்களின் உதவியைப் பெரிதும் எதிர்பார்த்து அவர்கள் மிகச்சிரமப் படுதற்குக் காரணமுமாயினர்.

அந்நாளில் மனைவி மக்களில்லாதான் இக்கொடியருக்குச் சிறிதும் அஞ்சவேண்டியிருந்திருக்காது; தான் அதிகமும் சிரமப்படவேண்டியிருந்திருக்காது; இதனனேதான் நம் நாட்டிற் சந்நியாசிகள் அதிகமாயினர்போலும்.

(இன்னும் வரும்.)

அ. சுப்பம்மாள்.

## விநோதக் கூற்றுக்கள்.

1. ஒருநாள் ஒருவன் ஒரு வக்கீலிடம் வந்து ஒரு அரைரூபாயைக் காட்டி 'இது செல்லுமா?' என்று கேட்டான். அந்த வக்கீலும் அந் நாணயத்தைக் கையில் வாங்கிப்பார்த்து 'நன்றாய்ச் செல்லும்' என்று சொல்லிவிட்டுத் தன் சட்டைச் சேப்பில் போட்டுக்கொண்டு "என்னிடத்தில் யோசனை கேட்க வருகிறவர்கள் எனக்கு ஒரு ரூபாய் கட்டணங் கொடுக்கவேண்டும். ஆகையால் நீர் வீட்டுக்குச் சென்று பாக்கி அரை ரூபாயையும் உடனே எனக்கு அனுப்பிவிடும்" என்றார்.

2. ஒரு பையனை இரண்டு துஷ்டர்கள் கிட்டி வந்து ஆளுக்கொரு புறமாக நின்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு பயமுறுத்தி "நீ மட்டியா? மடையனா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன் "ஐயா! நான் மட்டிக்கும் மடையனுக்கும் நடுவில் இருக்கிறேன்" என்றான். மற்றிருவரும் முகங்கவிழ்ந்து வெட்கிச் சென்றனர்

## சமாச்சாரக் குறிப்புகள்.

1. 1911ளு ஏப்பிரல்மீ 24உ சீரங்கம் ரயில் ஸ்டேஷனுக்கு பக்கத்தில் மகாலிங்கம் என்னும் ஒருவன் தண்டவாளத்தில் படுத்து ரயிலில் அகப்பட்டு உடல் நசுங்கி இறந்தான். இவன் பித்துப்பிடித்தவனென்று சொல்லுகின்றார்கள்.

2. குளித்தலையில் பெருங்காற்றால் முப்பது நாற்பது பெருந் தென்னைகள் அடியோடு வீழ்ந்தன. அதில் ஒரு மரம் ஒரு மகம்மதிய சிறுவன்மேல் விழுந்து அவனுடலைச் சிதறடித்துவிட்டது.

3. சென்ற மாதத்தில் முசிரிதாலுக்கா வைரிசெட்டிபாளயம்என்ற கிராமத்திலும் சுற்றுப்பக்கங்களிலும் கல்மழை பெய்தனவாம். ஒவ்வொரு கல்லும் எலுமிச்சங்கனி அளவு இருந்தனவாம்.

### தண்ணீர்க் குழாயில் வாய் வைத்து உருஞ்சும் சிறுவர்களுக்கு எச்சரிக்கை:—

1911ளு மேமீ 6உ வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு திருச்சி கோட்டை குஜிலித்தெருவிலிருக்கும் குழாயொன்றில் ஒரு சிறுவன்

தண்ணீர் குடிக்க வந்து தண்ணீரில்லாமையால் குழாயில் வாயை வைத்து உருஞ்சினான். குழாயிலிருந்த காற்று இவன் வாயிற் புகவே குழாயில் வாக்குவம் (Vaccum) உண்டானபடியால் இவன் நாக்கு குழாயின் உள்புறஞ் சென்றுவிட்டது. பிறகு அவனால் நாக்கைப் பிடுங்கவும் பேசவும் முடியாமல் சிறுவன் துடித்தான். அப்பொழுது பக்கத்திலிருந்தவர்களிலொருவர் அச்சிறுவனை தப்பித்துவிட்டார்.

## ஓர் பெருங்களவு

---

1911ஸு மேமீ 16உ செவ்வாய்கிழமையன்றிரவு சின்னக்கடைத் தெருவிலிருக்கும் வக்கீல் மகா-ள-ா-ஸ்ரீ L. S. ராமச்சந்திரய்யர் அவர்கள் கிருகத்தில் ஓர் பெரிய களவு நடந்ததாகத் தெரிய வருகிறது. சுமார் 7000 ரூபாய் சொத்துப்போயிருக்குமாம். காலை 8 மணிக்குள் போலீஸாரிடம் தெரிவிக்க, அவர்கள் விடாமல் முயற்சிசெய்து, சந்தேகப்பட்ட ஆட்களையெல்லாம் உடனே பிடித்து, 24 மணி நேரத்திற்குள் அநேகமாய் எல்லாச் சொத்துக்களையும் கைப்பற்றி விட்டார்கள். நாள் முழுதும் சாப்பாடுகூட இல்லாமல், டவுன் இன்ஸ்பெக்டர் மகா-ள-ா-ஸ்ரீ சுப்பய்யாவர்களும், முத்துக்கிருஷ்ணய்யர், சாமிநாதய்யர், மீனாக்ஷி சுந்தரமய்யர் முதலிய சப் இன்ஸ்பெக்டர்களும ஊக்கமுடன் வேலை செய்து கடைசியில் பலனடைந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் சுப்பய்யாவர்களும், ஷை சப் இன்ஸ்பெக்டர்களும் சிறந்த கீர்த்தியும் புகழும் அடைவார்களென்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. இவர்களது பிரயாசையையும் இந்நகரவாசிகளும், மேலதிகாரிகளும் நன்குமதிப்பார்களென்று நம்புகிறோம். வக்கீலவர்கள் கஷ்டப்பட்டுத் தேடின பொருளானகயால் கடவுளருளால் யாவையுமகப்பட்டுவிட்டன. கடைசியாக, இக்காரியம் முற்றிலும் எவ்விதத்திலுமுதவி புரிதற் பொருட்டே தான் செல்லவேண்டிய ஒரு விசேஷத்திற்குக் கூடச் செல்லாதிருந்த வக்கீல் மகா-ா-ள-ஸ்ரீ இராமய்யாவர்களுக்கும் மிக்க நன்றிகாட்ட கடமைப் பட்டிருக்கின்றார்கள்.

* வேறு சில சப் இன்ஸ்பெக்டர்கள் பெயர் தெரியாததைப்பற்றி விசனமுறுகின்றோம்.

## ஆயுள்வேத முறையும் ஐரோப்பிய முறையும் கலந்து செய்த பக்குவங்கள்.

---

Spermatorrhoea specific:— இது ஓர் நூதன மருந்து. சொர்ப்பனஸ்கலிதம், தாது கட்டுமானமில்லாதிருத்தல் இவைகளுக்குக் கைகண்டது. 24 வேளை மருந்தில் குணப்பட்டுவிடும். பத்தியமில்லை. ராஜாக்கள் மருந்து. படிக்கும் மாணாக்கர் இதைக் கவனிக்கவும்.

ரூ. 2—0—0.

### குழந்தைகளுக்கு.

Health Pills:— (குழந்தைகளுக்கு சுகமாத்திரை) புட்டி அணா 4 மாத்திரம். ஜுரம், ஜன்னி, வலிப்பு, மந்தம், வயிற்றுப் பொருமல், சகலத்திற்கும் அருமையானது. நன்றாய் மலவிர்சனமாகும், வாரம் ஒரு முறை இதை குழந்தைகளுக்கு உபயோகித்து வரவேண்டியது. அநேக தலைமுறையாய் அநுபோகமான மருந்து.

### பல்வியாதிகள்.

பல்வியாதி சகலத்திற்கும் எங்கள் குரு பல் பொடிக்கு நிகரானது வேறில்லவேயில்லை என்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். சகல தந்த நோயும் தீரும். நோய் வராமலும் பாதுகாக்கும் பொடி இது.

புட்டி அணா 4.

☞ எங்கள் மருந்து சாலையில் சகல வியாதிக்கும் கைகண்ட ஔஷதங்கள் இருக்கிறது. எல்லாம் ஆயுள்வேத முறை கலந்த பக்குவங்கள் தான். வியாதிக்கு ஏற்ற மருந்துகள்.

☞ வியாதிகளைப்பற்றி தெரியப்படுத்தினால் சரியான மருந்துகள் தபால் மூலம் அனுப்புவோம்.

விலாசம்.

டாக்டர். ஏ. மதுரம்

திருச்சிராப்பள்ளி.

---

பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிரிக்பாம் என்னும் சூலைநிவாரணி தைலம், இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்பு நோய் பிடிப்பு-பக்கநோய் தலைவலி, ஒற்றைதலைவலி மண்டையடி, பல்யீர் வீக்கம் தொண்டை கபமல்-இருமல்-மார்சளி-ஜலதோஷம்-இசிவு சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம். விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. சுப்பிரமணியம் பிள்ளை
கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் &
சர்மா & கோ,
திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம்.

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.